அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலை, இருவழிச் சாலையாக இருந்தால், அது நான்கு வழிச் சாலையாகவும், அது இருவழிச் சாலையாக இல்லாதிருந்தால், அதை இருவழிச் சாலையாகவும் மாற்ற முன்னுரிமை அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். சேலத்திலிருந்து பெங்களூரு செல்லும் பிரதான சாலைக்கும், சேலத்திலிருந்து சித்திரக்கோவில் செல்லும் பிரதான சாலைக்கும் பிரதான இணைப்புச் சாலை வேண்டும். சேலம் அரசு பொறியியல் கல்லூரியிலிருந்து திருமலைகிரிக்கு பாகல்பட்டி, சர்கார்கொல்லப்பட்டி வழியாகச் செல்லும் அந்தச் சாலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இருவழிச் சாலையாக மாற்றித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த மாவட்டத்திற்கு ஆய்வுக்குச் சென்றபோதே மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அவர்கள் இந்தச் சாலையைப் பற்றி குறிப்பிட்டுச் சொன்னார்கள். அப்போதே நான் அந்தப் பகுதியினுடைய கோட்டப் பொறியாளர் அவர்களிடம், சாலை சம்பந்தமாக, நில எடுப்பு செய்யப்பட வேண்டுமா அல்லது அரசுப் புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறியச் சொல்லியிருக்கிறேன். விவரம் என்னிடத்தில் வந்தவுடன், அந்தச் சாலைக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

7—

சட்டக் கல்லூரி

***1662—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2021 செப்டம்பர் 1]

(அ) கும்பகோணம் தொகுதியில் சட்டக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி, சட்டத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) இல்லை.

(ஆ) எனவே, இவ்வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

முற்பகல் 10-10

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்ட நீதிமன்றம் ஆங்கிலேயருடைய ஆட்சிக் காலத்தில் 1706 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. முதன்முதலில் நீதிமன்றம் என்பதைக் கும்பகோணத்தில்தான் தொடங்கியிருக்கிறார்கள். 1863 ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ 158 ஆண்டுகளுக்கு மேலாக கும்பகோணத்தில் செயல்பட்டுவந்த அந்த நீதிமன்றம், நீண்ட பாரம்பரியமிக்க பழமையான நீதிமன்றம் ஆகும். பின்னர், புதிதாக மாவட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டபோது, தஞ்சாவூரில் நீதிமன்றத்தைத் தொடங்கியுள்ளார்கள். தற்போது மாவட்டத் தலைநகரமாக ஆவதற்கான அந்தஸ்தை, தகுதியைப் பெற்றிருக்கிற நகரம் கும்பகோணம். கும்பகோணத்தில் அரசின் சார்பில் 2 கலைக் கல்லூரிகள், ஆடவர் கல்லூரி, பெண்கள் கல்லூரி மட்டும்தான் உள்ளன. I.T.I.–தொழிற்பயிற்சி நிலையம்,* Polytechnic– *தொழில்நுட்பக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, விவசாயக் கல்லூரி என தனியார் கல்லூரிகள் நிறைய இருந்தும், மேற்படிப்புக்காக வெளியூர் சென்று படிக்க வேண்டிய நிலை மாணவர்களுக்கு இருக்கிறது. எனவே, அரசின் சார்பில், பாரம்பரியம்மிக்க கும்பகோணத்தில் சட்டக் கல்லூரி அமைத்தால் சரியாக இருக்குமென்பதற்காகத்தான் கேட்கிறோம். ஒருங்கிணைந்த டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஏழை மாணவர்கள் சட்டப் படிப்பு படிக்க வேண்டுமானால், திருச்சி அல்லது சென்னைக்குச் செல்ல வேண்டிய நிலை உள்ளது. குறைந்த*

கட்டணத்தில் படிக்க அரசு சட்டக் கல்லூரி இல்லாததால் மாணவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கும்பகோணத்தில் புதிதாக ஒரு சட்டக் கல்லூரியை அமைத்திட ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தற்போது 14 சட்டக் கல்லூரிகளும், டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின்கீழ் சீர்மிகு சட்டப் பள்ளியும், திருச்சியில் தேசிய சட்டப் பல்கலைக்கழகமும், ஆக மொத்தம் 16 சட்டக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இதிலே ஏறக்குறைய 17,433 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். மாவட்டந்தோறும் சட்டக் கல்லூரி அமைக்க வேண்டுமென்பதுதான் தமிழக முதல்வர் அவர்களுடைய மேலான விருப்பமாகும். ஆனால், கடந்த ஆட்சியால் ஏற்பட்ட அசாதாரணமான நிதி நெருக்கடி காரணத்தினாலே, இந்த ஆண்டு எந்தவிதமான புதிய சட்டக் கல்லூரிகளும் துவங்க இயலாத சூழ்நிலை இருக்கின்றது. எனவேதான், அதற்கான வாய்ப்புகள் இந்த ஆண்டிலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கழக ஆட்சி வந்ததற்குப் பிறகு, நேற்றுதான் முதன்முதலாக இம்மன்றத்தில் கேள்வி நேரத்தை எடுத்திருக்கிறீர்கள். நான் என்னையே கிள்ளிப் பார்த்துக்கொண்டேன். இது நம்முடைய மன்றம்தானா என்று ஆச்சரியமாக இருந்தது. காரணம், கடந்த 10 ஆண்டுக் காலமாக இங்கே 3 பேர் முதலமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனால், இதுவரையிலும், முதலமைச்சர் தொடர்புடைய துறைக்கான கேள்வியை எடுத்து, அதற்குப் பதில் அளித்ததாக கடந்த 10 ஆண்டு கால வரலாற்றில் இல்லை. ஆனால், முதன்முதலாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், துணைக் கேள்விக்கு வாருங்கள்.

2021 செப்டம்பர் 1]

திரு. க. அன்பழகன்: *நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் (மேசையைத் தட்டும் ஒலி) கேள்வி நேரத்தில் ஒரு கேள்வியை எடுத்து, அதற்குப் பதிலளித்திருக்கிறார்கள். 23 முதலமைச்சர்களிலே 'முதல்' முதலமைச்சர் என்ற அந்த பெருமைக்குரிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்தில் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், தொழிலாளர், குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், கூடுதல் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், முதன்மை அமர்வு நீதிமன்றம், கூடுதல் அமர்வு நீதிமன்றம், முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நீதித் துறை நடுவர் நீதிமன்றங்கள் உள்ளன. மகளிர் வழக்குகள் தொடர்பான வழக்கறிஞர்களும், 50 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள தஞ்சாவூருக்குச் செல்ல வேண்டியுள்ளதால், கும்பகோணத்தில் மகளிர் நீதிமன்றம் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நீதிமன்றம் அமைப்பதற்கு உயர் நீதிமன்றத்தினுடைய ஒப்புதல் பெறவேண்டும். உயர் நீதிமன்றத்திலிருந்து வருகிற கோரிக்கையின் அடிப்படையில்தான் மாநில அரசு அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து, அங்கே நீதிமன்றங்களை உருவாக்க முடியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கும்பகோணத்தினுடைய வழக்கறிஞர் சங்கத்தின் மூலமாகவும், அந்த நீதிமன்றத்தின் மூலமாகவும், உயர் நீதிமன்றத்திற்கு அதுகுறித்த கோரிக்கைகளை அனுப்பி, அதை உயர் நீதிமன்றம் பரிசீலிக்கச் சொல்லி இங்கே அனுப்பினால், நம்முடைய முதல்வர் தளபதி அவர்களுடைய அரசு நிச்சயமாக அதை ஏற்றுக்கொண்டு, அமைத்துத் தரும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாக புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, அணுகுசாலைகள் உள்ளிட்ட இதர உட்கட்டமைப்புப் பணிகள் நிறைவடையாததால், இன்னும் திறக்கப்படாமலேயே இருக்கிறது. அது திறக்கப்படாமலேயே இருப்பதனால், அங்கே சமூக விரோதிகள் உள்ளே புகுந்து, ஏற்கெனவே கட்டி வைத்திருக்கிற கட்டடத்திற்குச் சேதத்தை விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே புதிதாகப் போடப்பட்ட கண்ணாடிகளெல்லாம் உடைந்திருக்கின்றன. எனவே, இதர உட்கட்டமைப்புப் பணிகளை விரைந்து முடித்து, அந்த நீதிமன்ற வளாகத்தைத் திறக்க வேண்டும். நீதிமன்ற ஊழியர்கள் சங்கத்தின் சார்பிலே என்னிடம் வந்து மனு கொடுத்தார்கள். அதுகுறித்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. சின்ன சின்ன வேலைகளெல்லாம் செய்யப்படாமல் இருப்பதால் அது அப்படியே நிறைவடையாமல் இருக்கிறது.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகப் பேசுங்கள். நீங்கள் debate மாதிரி பேச வேண்டாம்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: எனவே, அதை விரைந்து முடித்து, திறக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தினுடைய உட்கட்டமைப்புப் பணிகளுக்காகக் கூடுதல் நிதியை, அவர்களுடைய கோரிக்கையை ஏற்று கழகத்தினுடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அரசு ஒதுக்கீடு செய்து, நிச்சயமாக விரைவிலேயே அந்த நீதிமன்றம் திறக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள்.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற

வளாகம் புதிதாகக் கட்டப்பட்டு சிறப்பாகச் செயல்படுகிறது. அதோடு இணைத்து சார்பு நீதிமன்றம் தொடங்குவதற்கு, அதற்கான கட்டடங்களும் கட்டப்பட்டு தயார் நிலையில் இருக்கின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களை நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்தப் பகுதியில் இருக்கின்ற வழக்காடிகளும், வழக்கறிஞர்களும் வழக்குக்காக திருவாரூருக்கு கிட்டத்தட்ட 40, 50 கிலோ மீட்டருக்கு மேல் செல்ல வேண்டிய அவல நிலையிருக்கிறது. எனவே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், சார்பு நீதிமன்றம் தொடங்குவதற்கு அனுமதி வழங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், அதேபோல திருத்துறைப்பூண்டியைச் சேர்ந்த வழக்கறிஞர் சங்க நிருவாகிகளும் இதுகுறித்து எங்களைச் சந்தித்து கோரிக்கை விடுத்தார்கள். அங்கே பணிகளெல்லாம் முடிவுற்று இருக்கின்றன. எனவே, விரைவிலே உயர் நீதிமன்றத்திலே அதற்கான அனுமதியைப் பெற்று, அந்த மாவட்டத்திற்கான மாண்பமை உயர் நீதிமன்ற நீதியரசரின் அனுமதியோடு அந்த நீதிமன்றம் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரத்தில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், குற்றவியல் நடுவர் நீதிமன்றமும் கட்டி முடிக்கப்பட்டு ஒன்றரை ஆண்டுக் காலம் ஆகின்றது. நான் ஏற்கெனவே கடந்த சட்டமன்றத்தில் 2020 ஆம் ஆண்டு கோரிக்கை வைத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டக் கல்லூரி main கேள்வி. நீங்கள் நீதிமன்றத்திற்கு வந்துவிட்டீர்கள்.

திரு. தா. உதயசூரியன்: அதனை ஒட்டிய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *ஆகவே, அதற்குப் பாதை இல்லாமல் இருப்பதனால் ஒன்றரை ஆண்டுக் காலமாக திறக்க முடியவில்லை. அந்த இடம் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தமான இடமாக இருக்கிறது. அதற்கு 120 மீட்டர் நீளமும், 22 அடி அகலமும் இடம் தேவைப்படுகிறது என்று கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்குரிய தொகை 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்று சொல்லப்படுகிறது. அந்தக் கருத்துரு வந்திருக்கிறது என்று நான் சென்ற ஆண்டு ஏற்கெனவே மன்றத்திலே பேசியிருக்கின்றேன். ஆகவே, நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, அந்த வழியை ஏற்பாடு செய்து கொடுத்து, நீதிமன்றத்தைத் திறப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்பதோடு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், கேட்டு அமர்கிறேன் என்று சொல்லுங்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *ஒரேயொரு நிமிடம். அதைச் செய்து தருவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன். அதையொட்டி, அங்கே சார்பு நீதிமன்றம் இல்லை. கள்ளக்குறிச்சியில்தான் இருக்கிறது. கல்வராயன்மலையிலிருந்தும், மூங்கில்துரைப்பட்டியிலிருந்தும், கள்ளக்குறிச்சிக்கு கிட்டத்தட்ட 90 கிலோ மீட்டர் வர வேண்டும். கள்ளக்குறிச்சியில் நடைபெறுகின்ற சார்பு நீதிமன்ற வழக்குகளில் 70 சதவிகித வழக்குகள் சங்கராபுரம் தாலுகாவைச் சார்ந்தவை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சார்பு நீதிமன்றமும் அமைத்துக் கொடுங்கள் என்று கேளுங்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *ஆகவே, புதிதாக ஒரு சார்பு நீதிமன்றமும் உருவாக்கித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

2021 செப்டம்பர் 1]

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடந்த ஆண்டிலேயே நான் கோரிக்கை வைத்தேன். அந்தக் கோரிக்கை, செவி சாய்க்கப்படவில்லை' என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன் அவர்கள் தெரிவித்தார்கள். என்றைக்குமே, யாருடைய கோரிக்கையாக இருந்தாலும், அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்பதிலே உறுதியாக இருக்கிற அரசுதான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் பரிவுள்ளம் கொண்டவர். அவர் மானியக் கோரிக்கையின்போதே எந்த அளவுக்கு எல்லோரையும் கவர்கின்றவண்ணம் பேசினார் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, சங்கராபுரத்திலே இருக்கக்கூடிய உங்களுடைய மக்களையும் கவர்கின்றவண்ணம், 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயை நிச்சயமாகப் பெற்றுக் கொண்டு, அந்த இடத்தை ஒதுக்கித் தருவதற்கு, அவர்கள் ஆவன செய்வார்கள். அதற்குரிய நடவடிக்கைகளை நாங்கள், நீதி நிருவாகத் துறை, உள் துறை மூலமாக மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே சார்பு நீதிமன்றம் வருவது குறித்து கோரிக்கைகளை நீங்கள் மாண்பமை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வையுங்கள். அதன் பின்னர், அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

தார்ச் சாலை அமைத்தல்

*880— **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்ப்பெண்ணாத்தூர் தொகுதி, திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், ஆணானந்தல் முதல் பொரிக்கல் துரிஞ்சல் ஆறு வரை உள்ள இரண்டு கிலோ மீட்டர் தூரமுள்ள மண் சாலையை தார்ச் சாலையாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?